கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 18/2017

பிரதிவாதி தரப்பு சாட்சி -1 முருகேசன் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 19.09.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகேசன் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | ராமசாமி | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 39 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. சர்வே எண்.800 ஐ தென்வடல் பொழி போட்டு நான்கு பாகமாக பிரித்துள்ளார்களா என்றால் ஆமாம். மேற்கே உள்ள பாகம் எனது தாத்தா வீரபத்ர ரெட்டியார் உடையது என்றால் சரிதான். அதற்கு அடுத்து கீழ்புறம் உள்ள பாகம் வீரம ரெட்டியாருக்கும், அதற்கு அடுத்த கிழ்புறம் அக்குல் ரெட்டியாருக்கு, அதற்கு அடுத்து கீழ்புறம் பெருமாள் ரெட்டியாருக்கு என்றால் சரிதான். நான்கு பேரும் தென்புறம் உள்ள கிழமேல் வாரி வரை பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.820 ஐ நான்கு பாகமாக கிழமேல் பொழி போட்டு பிரித்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் தென்புறம் உள்ள பாகம் எனது தாத்தா வீரபத்ர ரெட்டியாருக்கும், அதற்கு அடுத்து கிழே வடபுறம் வீரம ரெட்டியார், அடுத்து வடபுறம் அக்குல் ரெட்டியாருக்கும், அதற்கு அடுத்து வடபுறம் பெருமாள் ரெட்டியாருக்கும் என்றால் சரிதான்.

2. மேற்படி நான்கு நபர்களுக்கும் சமமாக பாகம் பிரிக்கப்பட்டது என்றும், சர்வே எண்.800/5B ல் பெருமாள் ரெட்டியாருக்கு 1.84 ஏக்கர் நிலம் உள்ள நிலையில் சர்வே எண்.800/5A ல் 70 செண்ட் நிலத்தை சேர்த்தால் அவரது பாகம் அதிகரிக்கும் என்றால் சரியல்ல. சர்வே எண். 800/5A அக்குல் ரெட்டியாருக்கு பிரிந்த நிலம் என்றும், பெருமாள் ரெட்டியார் தனது பெயரில் பட்டா உள்ளதை பயன்படுத்தி அந்த நிலமும் அவருக்கு பாத்தியப்பட்டது என பொய்யாக வாதம் செய்கிறார் என்றால சரியல்ல. சுமார் 40 வருடங்களுக்கு முன்பிருந்தே அக்குல் ரெட்டியார் சர்வே

எண்.800/5A நிலத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. சர்வே எண்.800/2F ல் எனக்கு ஓட்டுவில்லை வீடு உள்ளது என்றால் சரியல்ல. காலி இடமாக உள்ளது. எனது தாத்தா காலத்திலேயே சர்வே எண்.800/2F ல் மண் சுவர் வைத்து கூரை போடப்பட்டது என்றால் சரியல்ல. அந்த வீட்டை தான் தற்போது சர்வே எண்.800/3C ல் மாற்றி அமைத்து கொண்டு சர்வே எண்.800/3C எங்களுக்கு பாத்தியம் என தவறாக வாதிடுகிறேன் என்றால் சரியல்ல.

3. சர்வே எண்.800/3C வீரம ரெட்டியார் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.800/3C வீரம ரெட்டியார் பாகத்திற்கு பிரிந்த நிலம் என்றும், அதில் நான் வீடு அமைத்து கொண்டு பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது வீடு இருக்கும் பகுதிக்கும் மட்டும் சர்வே எண்.800/3C1 என பட்டா பெற்றுள்ளேன் என்றால் ச ரியல்ல. சர்வே எண்.800/2F ல் வீட்டிற்கான வீட்டு வரி இரசீது மற்றும் மின் இணைப்பு இரசீதை சர்வே எண். 800/3C ல் உள்ள வீட்டிற்குரியது என பொய்யாக வாதிடுகிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.820/2D வீரம ரெட்டியாருக்கு பிரிந்த நிலம் என்றும், அதை எங்கள் நிலம் என தவறாக வாதிடுகிறேன் என்றால் சரியல்ல. பெருமாள் ரெட்டியார் சர்வே எண்.800/5A விற்கு தான் குற்றபிரிவு புகார் கொடுத்திருந்தாரா என்றால் ஆமாம்.

4. சர்வே எண்.820/2 D எங்கள் என நான் புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். விசாரணையில் ஏற்கனவே பாகம் பிரிந்ததை அனுசரித்தும், தற்போது அனுபவத்தில் உள்ளதை அனுசரித்தும் புகார்கள் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நாச்சம்மாள் என்பவர் தாக்கல் செய்த அ.வ.எண்.284/2013 வழக்கின் தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.800/4C ல் உள்ள கிணறு, மின் மோட்டார் ஆகியவை வீரம ரெட்டியாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியம் என்றால் சரியல்ல. வடக்கே உள்ள வாரி மேற்கே வந்து தெற்கே உள்ள கிழமேல் வாரியுடன் சேர்ந்து இரண்டு வாரியும் மேற்கு நோக்கி ஒன்றாக செல்கிறது என்றால் அதற்கும் எங்கள் நிலத்திற்கும் சம்மந்தம் இல்லை.

5. பாகம் பிரித்த காலம் முதல் வடக்கே உள்ள வாரியை பெருமாள் ரெட்டியார் அனுபவித்து வருகிறார் என்றும், நாங்கள் தெற்கே உள்ள வாரியை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். அதனால் ஒருவர் மற்றொருவர் நிலத்தில் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. தெற்கே உள்ள வாரி வழியாக தான் சென்று வருகிறோம் என்றும், மேற்கே உள்ளவர்கள் கிழக்கே உள்ள நிலங்களுக்கு

மற்றவர் நிலம் வழியாக செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.820/7E ல் மின் இணைப்பு அக்குல் ரெட்டியார் பெயரில் உள்ளது என்றும், அது அவருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியம் என்றால் சரியல்ல. நான்கு பேரும் பயன்படுத்தி வருகிறோம்.

6. அக்குல் ரெட்டியார் தனது வீட்டிற்கு அருகே போர் அமைத்து அதிலுள்ள நீரை சர்வே எண்.800/7E ன் கீழ் உள்ள கிணற்றில் விட்டு தன் பெயரில் உள்ள மின் மோட்டார் மூலமாக தனது வீட்டிற்கு பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. கிணற்று நீரை நாங்கள் நால்வரும் பயன்படுத்தி வருகிறோம். சர்வே எண்.800/8A ல் 30 செண்ட் வீரம ரெட்டியார் மனைவி காமாட்சியம்மாள் தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அது தாவா அ பட்டியல் சொத்து என்றும், அதை பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். 2 ம் வாதி தாவா D பட்டியல் சொத்தை தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கியது குறித்து எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். அது அவர்கள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். பெத்து ரெட்டியார் 2010 ல் தனது பாகத்தை சுந்தரத்திற்கு விடுதலை செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சுந்தரம் தனது மகனுக்கு செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளார்.

7. அதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் அவர்கள் சொத்தில் எனக்கு ஆட்சேபனை இல்லை. வீரம ரெட்டியாரிடம் அவரது பாகத்தை கிரையம் செய்து கொடுக்கும் படி கேட்டேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் கேட்டுஅவர் நல்லம்மாளுக்கும், 2 ம் வாதிக்கும் கிரையம் கொடுத்துவிட்டார் என்பதை மனதில் வைத்து கொண்டு பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.820/2D க்கு UDR க்கு முன்னால் வீரம ரெட்டியார் பெயரில் பட்டா இருந்தா என்றால் இல்லை எனது தகப்பனார் பெயரில் இருந்தது. நான் சொல்வது தவறு என்றும், UDR க்கு முன்னால் வீரம ரெட்டியார் பெயரில் இருந்தை தவறுதலாக UDR ன் போது எங்கள் பெயருக்கு மாற்றிக்கொண்டோம் என்றால் சரியல்ல. சர்வே எண்.800/5A அக்குல் ரெட்டியாருக்கு பாகம் பிரிந்தது என்றும், UDR ல் தவறுதலாக பெருமாள் ரெட்டியார் பெயரில் வந்ததை பயன்படுத்தி கொண்டு பொய்யாக உரிமை கொண்டாடி வருகிறோம் என்றால் சரியல்ல.

8. சர்வே எண்.800/5A நிலத்தை சேர்த்தால் தான் அக்குல் ரெட்டியாருக்கு முழுமையான பாகம் கிடைக்கும்எ ன்றும் நாங்கள் அதை ஏமாற்றி வருகிறோம்

என்றால் சரியல்ல. வாதிகள் தான் தாவா சொத்துக்கள் முழுவதையும் செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையிலும், கிரைய ஆவணத்தின் அடிப்படையிலும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும், நாங்கள் வேண்டுமென்றே அவர்கள் சுவாதீனத்திற்கு தொல்லை கொடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட கிணறு மற்றும் மின் இணைப்பை பொதுவில் உள்ளது என பொய்யாக வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல. எனவே வாதிகள் கேட்டுள்ளபடி செலவுத்தொகையுடன் வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
**Kulithalai.**